සේවා නියුක්තයන්ගේ භාර අරමුදල් මණ්ඩලය
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்
EMPLOYEES' TRUST FUND BOARD

## ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு (ETF) கொடுப்பனவு செலுத்தும் தொழில் வழங்குநர்களுக்கான அறிவித்தல்

## இணைய வழியில் ETF பங்களிப்புக்களை செலுத்தல் மற்றும் மாதாந்த அறிக்கைகளை சமர்ப்பித்தல்

**ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையினால்** 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் 43 ஆம் பிரிவின் பிரகாரம் வெளியிடப்பட்ட 2022 டிசம்பர் 22 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமனி இல. 2311/39 (பதிவிறக்கம் செய்யவும்) பிரகாரம் ETF பங்களிப்புகளைச் செலுத்துதல் மற்றும் மாதாந்த அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் தொடர்பான சட்ட விதிமுறைகளை அனைத்து வாடிக்கையாளர்களும் கண்டிப்பாகப் பின்பற்றியொழுக வேண்டுமென இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

### 1. கட்டாய இணைய வழி பணம் செலுத்தல் மற்றும் சமர்ப்பித்தல்

மேற்கூறப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், பதினைந்து (15) அல்லது அதற்கு மேற்பட்ட ஊழியர்களைப் பணியமர்த்தும் ஒவ்வொரு தொழில் வழங்குநரும் பின்வருவனவற்றைக் கடைப்பிடித்தல் வேண்டும்:

a) ஒவ்வொரு ஊழியரின் மொத்த மாத வருமானத்திலும் 3% தொகையை **ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு** (ETF) பங்களிப்புத் தொகையாக செலுத்துதல்;
b) பணியாளர் விபரங்கள் உள்ளிட்ட ஏற்புடைய மாதாந்த அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்;

அனைத்துக் கட்டணங்களும், உரிய பங்களிப்புத் தொகைக்குரிய மாதத்தைத் தொடர்ந்து வரும் மாதத்தின் இறுதி நாளிலோ அல்லது அதற்கு முன்னரோ கணினி அமைப்பு அல்லது மொபைல் இலத்திரனியல் சாதனம் மூலமாக மாத்திரம் செலுத்தப்படல் வேண்டும் .

15 அல்லது அதற்கு மேற்பட்ட ஊழியர்களைப் பணியமர்த்தும் அனைத்து தொழில் வழங்குநர்களும் இந்த விதிகளைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும். அதற்கமைய, 2026 ஜூலை மாதத்திற்கான பங்களிப்புத் தொகை (2026 ஆகஸ்ட் 31 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தப்படல் வேண்டும்) எதிர்காலத்திற்கு செலுத்த வேண்டிய அனைத்துக் கொடுப்பனவுகளும் மற்றும் தவணை அறிக்கைகளின் சமர்ப்பிப்புகளும் இலத்திரனியல் முறையில் மாத்திரமே செய்யப்படல் வேண்டும்.

**அதன்பின்னர், காசோலை, காசுக்கட்டளை (Money Order) அல்லது காசாக செய்யப்படும் கொடுப்பனவுகளும், அச்சிடப்பட்ட தவணை அறிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**

ETF பங்களிப்புகளைக் குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்தத் தவறும் அல்லது ஏற்புடைய தவணை அறிக்கைகளைச் சமர்ப்பிக்கத் தவறும் தொழில் வழங்குநர்கள், ஏற்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளின்படி மேலதிக கட்டணங்களுக்கு உட்படுவார்கள். (மேலதிகக் கட்டணங்கள் பற்றிய மேலதிக விபரங்களை இங்கே பெற்றுக்கொள்ளவும் )

**2. இணையவழி / இலத்திரனியல் வங்கி வசதிகள்**

ஒன்பது (9) பிரதான வணிக வங்கிகள் இலத்திரனியல் வங்கிச் சேவை (E-Banking / Online Banking) மூலம் ETF பங்களிப்புகளைச் செலுத்துவதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன (அந்த வங்கிகளின் விபரங்களை இங்கே பெற்றுக்கொள்ளவும் )

ஏனைய வங்கிகளில் கணக்கு வைத்திருக்கும் தொழில் வழங்குநர்கள், தங்களது வங்கியைத் தொடர்புகொள்வதன் மூலம் நேரடிப் பற்று (Direct Debit) வழியாக ETF பங்களிப்புகளைச் செலுத்துவதற்குப் பதிவு செய்துகொள்ள முடியும்.

**3. 15 க்கும் குறைவான பணியாளர்களைக் கொண்ட தொழில் வழங்குநர்கள்**

15 க்கும் குறைவான பணியாளர்களைக் கொண்ட தொழில் வழங்குநர்கள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள இலத்திரனியல் முறைகள் மூலமாக பங்களிப்புகளைச் செலுத்த முடியும். அவ்வாறே, மாதாந்த அறிக்கைகளையும் சமர்ப்பிக்க முடியும். மேலும் அவ்வாறு செய்வதற்கு அவர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். இது பணிகளை எளிதாகவும், துல்லியமாகவும், விரைவாகவும் மேற்கொள்வதற்கு உதவுகின்றது.

**4. மேலதிக தகவல்களுக்கு**

மேலும் தகவல்களுக்கோ அல்லது உதவிக்கோ, ETF E-Banking பிரிவைத் தொடர்பு கொள்ளவும்: 011-7747260 | 011-7747850 | 011-7747829 | 011-7747265

மேலும், தங்களுக்கு அருகிலுள்ள ETF பிராந்திய அலுவலகம் அல்லது தங்களது வங்கிப் பங்காளரை தொடர்பு கொண்டு அல்லது **ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின்** உத்தியோகப்பூர்வ இணையத்தளத்தில் www.etfb.lk பிரவேசித்து தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**சோமசிறி ஏகநாயக்க**
தலைவர் / பிரதம நிறைவேற்று அதிகாரி
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை

**ETF பிராந்திய அலுவலகங்கள்**

| | | | |
|---|---|---|---|
| கொழும்பு மாவட்ட அலுவலகம்<br>011 7747288 | கொழும்பு 1 - 7<br>011 7747295 | கொழும்பு 8 - 15<br>011 7747279 | கம்பஹா<br>**0** 33 2234520 |
| காலி<br>091 2245814 | களுத்துறை<br>034 2237722 | கண்டி<br>081 2233793 | அனுராதபுரம்<br>025 2222185 |
| குருநாகல்<br>037 2228194 | கேகாலை<br>035 2222991 | யாழ்ப்பாணம்<br>021 2220010 | வவுனியா<br>024 2228225 |
| நுவரெலியா<br>052 2224457 | திருகோணமலை<br>0 26 2056606 | இரத்தினபுரி<br>045 2222930 | மாத்தறை<br>041 2224366 |
| பதுளை<br>0 55 2224482 | ஹம்பாந்தோட்டை<br>047 2222460 | அம்பாறை<br>063 2222845 | |

**இலத்திரனியல் வங்கிச் சேவை மூலம் ETF பங்களிப்புகளைச் செலுத்துவதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.**

| | | |
|---|---|---|
| ▪ இலங்கை வங்கி (E-BANK Unit)<br>011-2204659 / 011-2204654<br>011-2204663<br>Hotline: 1975 | ▪ மக்கள் வங்கி<br>011-2594503 / 011-2586631<br>011-2481538 | ▪ கொமர்ஷல் வங்கி<br>011-2353588 / 011-2353628 |
| ▪ சம்பத் வங்கி<br>011-2332173 /<br>011-2017536/37 / 38 | ▪ செலான் வங்கி<br>011-2456249 / 011-2456238<br>011-2008888 | ▪ நேஷன் டிரஸ்ட் வங்கி<br>011-4711411 |
| ▪ டிஎ்.்ப்சி சி வங்கி<br>011-2372537 / 011-2372557 | ▪ ஹட்டன் நெஷனல் வங்கி<br>011-2661976 / 011-2661960 | ▪ NDB வங்கி<br>076-5366381 / 074-1447082<br>076-0459233 |

## அபராதங்கள் / மேலதிகக் கட்டணங்கள்

**பங்களிப்புகளைத் தாமதமாகச் செலுத்துவதற்கான மேலதிகக் கட்டணம் – பிரிவு 27**

**தாமதமான பங்களிப்பு கொடுப்பனவுகள் மீதான மேலதிகக் கட்டணம் – பிரிவு 27**

1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் பிரகாரம், சட்டத்தின் விதிகளுக்கமைய செலுத்தப்பட வேண்டிய ஏதேனும் பங்களிப்புத் தொகையை உரிய திகதியில் செலுத்தத் தவறும் ஒரு தொழில் வழங்குநர், அந்தத் தாமதமானது தனது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணங்களினால் ஏற்பட்டது என்பதைச் சபைக்குத் திருப்திகரமான முறையில் விளக்கத் தவறுமிடத்து அத்தாமத காலத்தின் அடிப்படையில் கணக்கிடப்படும் மேலதிகக் கட்டணத்தைச் செலுத்துவதற்கு அவர் பொறுப்புடையவராவார்.

தாமதக் கட்டணங்கள் (முழுமையான பங்களிப்புத் தொகை தாமதமாகச் செலுத்தப்பட்டிருந்தால் அல்லது செலுத்தப்பட்ட தொகை கணக்கிடப்பட்ட பங்களிப்பை விடக் குறைவாக இருந்தால், குறித்த பங்களிப்பு செலுத்தப்பட வேண்டிய இறுதித்

திகதியிலிருந்து முழுமையான கொடுப்பனவு செலுத்தப்படும் திகதி வரையிலான நாட்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப மேலதிகக் கட்டணம் சேர்க்கப்படும்):

| **தாமதக் காலம்** | **பங்களிப்புத் தொகையின் மீது செலுத்த வேண்டிய மேலதிகக் கட்டணம்** |
|---|---|
| 10 நாட்களுக்கு மேற்படாத தாமதம் | 5% |
| 11 நாட்கள் முதல் 01 மாதம் வரையிலான தாமதம் | 15% |
| 01 மாதம் முதல் 03 மாதங்கள் வரையிலான தாமதம் | 20% |
| 03 மாதங்கள் முதல் 06 மாதங்கள் வரையிலான தாமதம் | 30% |
| 06 மாதங்கள் முதல் 12 மாதங்கள் வரையிலான தாமதம் | 40% |
| 12 மாதங்களுக்கு மேலான தாமதம் | 50% |

---

**அறிக்கைகளை சமர்ப்பிக்கத் தவறுதல் மீதான மேலதிகக் கட்டணம் – பிரிவு 37A**

1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் 37A பிரிவின் பிரகாரம், பங்களிப்புகள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டிய கடப்பாட்டைக் கொண்டுள்ள ஒரு தொழில் வழங்குநர், அந்த அறிக்கையை உரிய காலப்பகுதிக்குள் சமர்ப்பிக்கத் தவறுமிடத்து அல்லது தவறான / முழுமையற்ற அறிக்கையைச் சமர்ப்பிக்குமிடத்து, அத்தகைய தவறு குறித்து சபைக்குத் திருப்திகரமான விளக்கத்தை அளிக்கத் தவறும்பட்சத்தில் குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய திகதியிலிருந்து சரியான மற்றும் முழுமையான அறிக்கை கிடைக்கப்பெறும் திகதி வரை, பூர்த்தியான ஒவ்வொரு மாதத்திற்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கும் குறித்த பங்களிப்புத் தொகையில் **1% விகிதத்தில்** மேலதிகக் கட்டணத்தைச் செலுத்துவதற்கு தொழில் வழங்குநர் பொறுப்புடையவராவார்.